செ.வெ.எண்.98 நாள்.31.07.2017.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப. அவர்கள் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 30 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், 19 பயனாளிகளுக்கு புதிய ஸ்மார்ட் அட்டைகளையும், ஒரு நபருக்கு கணவனால் கைவிடப்பட்டோருக்கான உதவித் தொகையினையும் வழங்கினார்கள்.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (31.07.2017) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், வருவாய்த் துறையின் மூலம் பாளையங்கோட்டை வட்டம், மேலத்திடியூர் கிராமத்தைச் சார்ந்த 10 நபர்களுக்கும் சங்கரன்கோவில் வட்டம், பெருமாள்பட்டி கிராமத்தைச் சார்ந்த 8 நபர்களுக்கும், பந்தபுளி கிராமத்தைச் சார்ந்த 12 நபர்களுக்கும் என மொத்தம் 30 இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், மாவட்ட வழங்கல் துறையின் மூலம் 19 நபர்களுக்கு புதிய ஸ்மார்ட் குடும்ப அட்டைகளையும், மானூர் வட்டம், உக்கிரன்கோட்டை கிராமத்தைச் சார்ந்த திருமதி.பியூலா ரூபி வசந்தா என்பவருக்கு கணவனால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை மாதம் ரூ.1000/– வழங்குவதற்கான உத்தரவினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

முன்னதாக, மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, பட்டா மாறுதல், குடிநீர், சாலை வசதிகள் உள்பட பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெற்று சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி, விரைவில் பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்கள். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவு மற்றும் ஆட்சித்தலைவர் அவர்கள் மூலம் பெறப்பட்டு நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். விண்ணப்பதாரர்களுக்கு உடனுக்குடன் பதில் அனுப்ப வேண்டும் என உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.செண்பகவல்லி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி, திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, பாளையங்கோட்டை வட்டாட்சியர் திரு.தங்கராஜ், சங்கரன்கோவில் துணை வட்டாட்சியர் திரு.ஹரிஹரன் உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.